வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 107/ அ3/2023 நாள் 09.01.2024

பொருள் : பள்ளிக் கல்வி – 28.12.2023 அன்று பள்ளிக் கல்வி இணை இயக்குநர் மாநில ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி தலைமை ஆசிரியர் மாவட்ட அளவில் மற்றும் ஒன்றிய அளவில் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படுதல் – சார்பு

பார்வை : 1.சென்னை, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.36079/பிடி1/இ2/2023 நாள்.20.11.2023இன் படி 24.11.2023 மற்றும் 25.11.2023 ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற மீளாய்வு கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் மற்றும் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் வழங்கிய அறிவுரைகள்
2. சென்னை, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (மாநில ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்) அவர்களின் காணொளி கூட்ட நாள்.05.12.2023

----

மாணவர்கள் நலன் மற்றும் பள்ளிகளில் மேம்பாடு சார்ந்து ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ள இணைப்பில் உள்ள தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாகவும், ஒன்றிய அளவில் ஒருங்கிணைப்பாளர்களாகவும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியின் அடிப்படையில் செயல்பட கேட்டுக்கொள்ளப்படுகிறது,

ஒருங்கிணைப்பாளர்காளாளாக செயல்படும் தலைமை ஆசிரியர்கள் மாதத்தில் இரண்டு நாட்கள் பள்ளிகளில் கள ஆய்வு மேற்கொண்டு தங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளின் முன்னேற்ற அறிக்கையினை வேலூர் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் அ3 பிரிவில் மாதம் தோறும் முதல் வாரத்தில் சமர்பிக்க வேண்டும். இப்பணிகளை மேற்கொள்ளும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு தலைமை ஆசிரியர்கள் தகுந்த ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இணைப்பு பயிற்சி சார்ந்து (Bridge Course) ஒன்றிய வாரியாகவும், பாட வாரியாகவும் இணைப்பில் உள்ள (தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம்) ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : பணிகள் மற்றும்
ஒருங்கிணைப்பாளர்கள் விவரம்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமையாசிரியர்கள்
அனைத்து அரசு /அரசு உதவிபெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல் :
மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை)
மாவட்டக் கல்வி அலுவலகம்,
வேலூர்.